
# Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு11 தொகுதி 4 அக்டோபர் - டிசம்பர் 2021


R5450

## “இப்போது நமது இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது”

## NOW IS OUR SALVATION NEARER

**“நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்போது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது” – ரோமர் 13:11.**

பரிசுத்த பவுல் மேற்கண்ட வார்த்தைகளை எழுதியிருக்கிறார். இன்றைய நாளின் தேவனுடைய ஜனங்கள் இதே உணர்வுகளை வெளிப்படுத்துவதை, நிச்சயமாகவே நியாயப்படுத்துகிறார்கள். முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தின் மூலம் வரும் சபையின் இரட்சிப்பு, அந்த மகிமையான நிறைவேற்றத்துக்கு முன், துல்லியமாக இன்னும் எத்தனை நாட்கள் இருக்கிறது என்பதை நாம் அறியாதபோதிலும், ஒவ்வொரு நாளும் சமீபமாயிருக்கிறது என்பதில் நாம் உறுதியாயிருக்கிறோம். அதேபோல, உலகத்தின் இரட்சிப்பும்.. அதாவது சாத்தான், பாவம் மற்றும் மரணத்திலிருந்தான உலகத்தின் மீட்பும் நாளுக்கு நாள் சமீபமாயிருக்கிறது. இருந்தபோதிலும், எந்த நாளில் அல்லது எந்த மணிநேரத்தில் சாத்தான் ஆயிரவருடமளவும் முழுமையாக கட்டப்பட்டிருப்பான் என்பதையும், ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலத்தின்மீது ஒரு மாபெரும் மூடலாக இருக்கிற சாபத்தை அகற்றுவதற்கும், சுருட்டிப் போடுவதற்குமான மேசியாவின் ஆசீர்வாதங்கள் துவங்கும் .. அதாவது, ஒரு அந்தகாரம் சூழ்ந்த இரவு, மகிமையான ஆயிரவருட நாட்களுக்கும், மேசியாவின் இராஜ்ஜியத்தின் ஒளிரும் பிரகாசத்திற்கும் விரைவில் இடமளிக்கும் என்பதை சாதகமாக சொல்ல முடியாது என்பது உண்மையே.

ஆபிரகாமிடத்தில் ஏற்படுத்தி, ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இஸ்ரயேலுக்கு உறுதிப்படுத்திய, தேவனுடைய ஆணையிட்டு உறுதிப்படுத்திய உடன்படிக்கையில் சுருக்கமாக கூறப்பட்டுள்ள, யுகங்களைப் பற்றின தெய்வீகத் திட்டத்தில் உள்ள நம்முடைய விசுவாசத்தை எதுவும் அசைக்க முடியாது. இறுதியில் பூமியிலுள்ள எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்களா என்று வினா எழுப்புவதற்கு எந்த அடிப்படையும் இல்லை. மனிதனின் மீட்பராக ஆகிய தம்முடைய குமாரனை அனுப்பிய அந்த ஆசீர்வாதத்திற்கான பரந்துவிரிந்த ஒரு அஸ்திபாரத்தை தேவன் அமைத்துள்ளார் என்பதில் சந்தேகப்படுவதற்கு இடமில்லை. 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக, சபையானது இந்த தற்காலத்தில் கர்த்தருடைய பாடுகளிலும், அதைத் தொடர்ந்து வருகிற மகிமையிலும் பங்குபெறுவதற்கு உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு வருகிறார்கள் என்ற உண்மையை கேள்விகேட்க எந்த காரணமும் இல்லை.

“உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார்” என்ற உண்மையைப் பற்றி கேள்வியெழுப்ப ஒன்றுமில்லை. “நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே; தேவனுடைய சுதந்திரரும், நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே”(ரோமர் 8:17) என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை பெற்றுள்ளோம். தலையாகிய இயேசுவும் அவருடைய சரீரமாகிய சபையும், மணவாளனாகிய இயேசுவும் அவருடைய மணவாட்டியாகிய சபையும் ஆபிரகாமின் நிஜமான ஆவிக்குரிய வித்தை கட்டமைக்கிறார்கள். அவர்கள் மகிமையடையும்போது, அவர்கள் மூலமாக தேவனுடைய ஆசீர்வாதம் மனுக்குலத்தின்மீது ஊற்றப்படும் என்ற தெய்வீக வார்த்தையை நாம் பெற்றிருக்கிறோம். “உனக்குள்ளும் உன்

## இம்மாத வெளியீட்டில்


.. இப்போது நமது இரட்சிப்பு சமீபமாயிருக்கிறது ... 1

.. வார்த்தைகளினால் நீதிமான் அல்லது குற்றவாளி .. 5

.. *திராட்சத்தோட்டத்தில் வேலையாட்கள்* ... 10

.. *ஆர்வத்தைத் தூண்டும் கேள்வி* ... 14

.. *தெய்வீக முரண்பாடுகள்* ... 16



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்'' (ஆதி12:3; 28:14) என்ற வாக்குத்தத்தத்தின்படி,''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்க–ளானால்,ஆபிரகாமின்சந்ததியாராயும், வாக்குத்தத்தத்–தின்படி சுதந்தரராயும் இருக்கிறீர்கள்''(கலாத் 3:29).

இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவு தற்போது வாசற்படியிலிருக்கிறது, வேத வாக்கியம் முன்னரே சொன்னதுபோல், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராத ஒரு மாபெரும் உபத்திரவக் காலத்தில் இதன் முடிவு இருக்கும் என்பதைப் பற்றி கேள்வியெழுப்ப வேத மாணவர்களுக்கு எவ்வித துல்லியமான அடிப்படையும் இல்லை. இந்த நெருக்கடியில் பங்குபெறுகிறவர்கள், தங்களை முதலாளித்துவம், அறக்கட்டளைகள், தொழிலாளர்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள் என்ற தலைமையின்கீழ் தங்களை ஒன்றிணைத்துக் கொண்டிருக்கிறதை நாம் காண்கிறோம். அந்த மாபெரும் நெருக்கடி, அந்த பெரும் மோதல், அக்கினி என்று அடையாளத்தில் குறிப்பிடப்படுகிறது. அது சபைக்குரிய வானங்களையும், சமூகமாகிய பூமியையும் சுட்டெரிப்பது மிக அருகில் உள்ளது.

ஆனால் இதை நாம் சொல்லும்போது, மேற்கூறிய அனைத்தும் சொல்வதற்கு பாதுகாப்பாகவோ அல்லது முறையானதாகவோ இருக்கிறது என்று நாம் கூறுகிறோம். நாம் ஒருபோதும் அகத்தூண்டுதலையோ அல்லது தீர்க்கதரிசன பார்வையோ உரிமை கோரவில்லை. வேதத்தில் நாம் பார்த்த அற்புதமான காரியங்களையும், பரலோகத் தந்தை மற்றும் நம் பரலோக கர்த்தராகிய இயேசுவின் அன்பு பாசத்துக்குரியதாயிருப்பதையும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கான காலம் சமீபித்திருக்கிறது என்பதையும் நாம் உரிமை கோருகிறோம்.

### விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட காலக்கணக்கு

இந்த பத்திகளிலும் வேதாகம விளக்கவுரையின் ஆறு தொகுதிகளிலும் காலங்கள் மற்றும் வேளைகள் தொடர்பான அனைத்தையும் தற்காலிக வடிவத்தில் அமைத்துள்ளோம் என்பதை நம் வாசகர்களுக்கு இங்கு நினைப்பூட்டுகிறோம். அதாவது, தீர்மானத்துடன் அல்ல, நாம் அறிந்திருக்கிறதை, உரிமைகோருவதாகவும் அல்ல, மாறாக, ''இவ்வாறு இப்படி'' வேதத்தின் போதனைகள் காணப்படுகிறது என்ற ஆலோசனையுடன் நாம் அமைத்துள்ளோம். இரண்டாம் தொகுதியில் வழங்கப்பட்டுள்ள வேதாகம காலக்கணக்கை நமது வாசகர்கள் அனைவரும் மனதில் புதிதாக வைத்திருக்கவேண்டும் என்பதற்காக, வேதாகம விளக்கவுரையின் இரண்டாம் தொகுதியிலுள்ள இரண்டாம் அத்தியாயத்தில் பெரேயன் பாடங்கள் தற்போது நடந்துவருகிறது. வேதாகம விளக்கவுரையில் அமைந்துள்ள தீர்க்கதரிசன விளக்கவுரைகளின் கிட்டத்தட்ட எல்லா பரிந்துரைகளின் அடிப்படையில், வேதாக காலக்கணக்கு இருக்கிறது என்று நாம் குறிப்பிட்டுள்ளோம். வேதாகம காலக்கணக்கு மிக தெளிவுடன் கூறப்படவில்லை என்றும், வருடங்களின் சிறிய அளவுகள்(பின்ன அளவுகள்) கைவிடப்பட்டுள்ளது என்பதையும், அதில் குறிப்பிட்ட இடைவெளிகள் இருப்பதையும் அங்கு நாம் குறிப்பிட்டுள்ளோம்.

பொதுவாக காலக்கணக்கு மிகவும் போதுமானதாக, ஒரு ஆதாரமாக இருக்காது என்றும், அதை ஏற்றுக்கொள்வது நம் விசுவாசத்தின் அடிப்படையிலேயே இருக்கிறது என்றும் நாம் பரிந்துரைத்திருக்கிறோம். அதாவது, தேவன் நமக்கு ஒரு காலக்கணக்கை கொடுக்க விரும்பினார், காலங்கள் மற்றும் வேளைகள் பற்றிய சிறிதளவு அறிவை நாம் பெற்றிருக்கவேண்டும் என்று விரும்பினார், எனினும் தம்முடைய ஜனங்கள் சார்பில் விசுவாசம் தேவையாயிருப்பதற்காக, அது மங்கலாகவும், தெளிவற்றதாகவும் இருக்கவேண்டும் என விரும்பினார் என்ற அனுமானத்தின் அடிப்படையில் உள்ளது என்று நாம் பரிந்துரைத்துள்ளோம். மேலும் இந்த காலக்கணக்கு, எண்ணற்ற தீர்க்கதரிசனங்களுடன் பின்னிப் பிணைந்ததாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவும் தோன்றுகிறது என்ற உண்மையின் அடிப்படையில், அந்த விசுவாசத்தை பயிற்சிசெய்யமுடியாது என்றும், மாறாக, இந்த தீர்க்கதரிசனங்கள் காலக்கணக்கை சார்ந்திராத மற்ற தீர்க்கதரிசனங்களுடனும் நிறைவேறுதல்களுடனும் பின்னிப்பிணைந்து இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் குறிப்பிடுகிறோம். இப்படியாக, நம்முடைய வாசகர்களின் மனங்களில் இந்த விஷயத்தை அமைத்தபிறகு, காலக்கணக்கிலும் அதனோடு தொடர்புடைய தீர்க்கதரிசனங்களை பயன்படுத்துவதிலும், எந்த அளவு விசுவாசத்தை அவர் கொண்டுள்ளார் என்பதை ஒவ்வொருவரும், தனக்குத்தானே நிதானித்துப் பார்க்கும்படி நாம் கேட்டுக்கொண்டோம். காலக்கணக்கையும் தீர்க்கதரிசனங்களையும் இந்த கண்ணோட்டத்திலிருந்து ஏற்றுக்கொள்வது, நம்முடைய சொந்த சிந்தைக்கு நியாயமாகத் தோன்றுகிறது என்று நாங்கள் அறிவித்தோம்.

இந்த பரந்த அடித்தளத்தை அமைத்திருந்து, நம் வாசகர்கள் அனைவரையும் தங்கள் சொந்த நிதானிப்பை

பயன்படுத்தும்படி கவனிக்கவைத்து, பல்வேறு தீர்க்கதரிசனங்களுடன் தொடர்புபடுத்தி, பல்வேறு கருதுகோள்களையும், முடிவுகளையும் கொணர்ந்தும் இந்தக் காலக்கணக்கை பயன்படுத்துவதற்கு தொடங்கினோம். இந்த எல்லா முடிவுகளும் காலக்கணக்கை அடிப்படையாகக் கொண்டவை என்றும், அந்த காலக்கணக்கு விசுவாசத்தினால் மறுப்புக்கிடமின்றி ஆமோதிக்கப்படுகிறது என்றும், எந்தவிதத்திலும் நம் வாசகர்களுக்கு புதிதாக நினைவுபடுத்தவில்லை. புத்திக் கூர்மையுள்ள எல்லா வாசகர்களும் இதை உணர்ந்துகொண்டார்கள் என்றும், அப்படிப்பட்டவர்கள் அனைவரும், காலக்கணக்கை குறித்தும், அந்த காலக்கணக்கின் நிலையின் மேலுள்ள தீர்க்கதரிசனங்களின் பயன்பாடுகளைக் குறித்தும், நம்முடைய நிதானிப்பை அல்ல, அவர்களுடைய சொந்த நிதானிப்பையே பயன்படுத்துகிறார்கள் என்று நாம் கருதுகிறோம். இதையே இனியும் செய்ய உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அந்த காலக்கணக்கு நூலாசிரியருக்கு எப்போதும் பலமாக காணப்படுகிறது. அவர் அதில் எதையும் மாற்றவோ அல்லது திருத்தவோ பார்க்கவில்லை. இருந்தபோதிலும், ஏற்கனவே இந்த ஆண்டு இரண்டுமுறை செய்தது போல, நூலாசிரியர் எல்லா காவற்கோபுர வாசகர்களும் கவனிக்கும்படி வைப்பதற்கு விரும்புகிறார், முன்பே பரிந்துரைத்தபடி, அவர் முன்னெதிர்பார்த்த அனைத்தையும் இந்த வருடத்திலேயே எதிர்பார்ப்பது அவருடைய சொந்த நிதானிப்புக்கு தற்போது நியாயமற்றதாக காணப்படுகிறது. இந்த வருடத்தின் மீதமுள்ள மாதங்களில் சபை கூட்டமைப்பு, தன் அமைப்பிலும் அதிகாரத்திலும் இறுதிக்கட்டத்தை அடைந்து, அது விழுகை அடைவதற்கு சாத்தியமில்லை என்று அவர் பார்க்கிறார். இந்த சுவிசேஷ யுகத்தின் முழுநிறைவுக்கும், கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிற சபையின் கடைசி அங்கத்தினர் மகிமையடைவதற்கும் முன்பு, இது நிகழும் என நிச்சயமாக அவர் பார்க்கிறார்.

இது காலக்கணக்கு தவறானது என்பதையோ, புறஜாதியாரின் காலம் இந்த வருடத்தோடு முடிவுக்கு வராது என்பதையோ நிரூபிப்பதில்லை. திருச்சபை தன்னலக்குழு, ஆசாரியருக்குரிய அதிகாரத்தை அடைவதற்கு முன்பு புறஜாதியாரின் காலம் முடிவடையலாம். நாம் காத்திருந்து பார்க்கவேண்டும். கர்த்தர் இன்னும் நம் மேய்ப்பராயிருக்கிறார். அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து, அந்நியர்களின் சத்தத்தை புறக்கணிக்கிற அவருடைய ஆடாகிய அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு எந்த நன்மையையும் அவர் நிறுத்தி வைக்க மாட்டார். அவருடைய வாக்குத்தத்தங்கள் உறுதியாய் நின்று, மற்ற எல்லாவற்றையும் போன்று இவைகள், அவருடைய நோக்கத்திற்காக அழைக்கப்பட்டுள்ள, அவரில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே ஒருங்கிணைந்து கிரியை செய்யும்.

### நிறைவேற்றப்பட இருக்கிற வேத வசனம்

கர்த்தர் தாவீது தீர்க்கதரிசியின் மூலம் சங்கீதம் **149:5–9**இல் அறிவிக்கிறார்: “பரிசுத்தவான்கள் மகிமையோடு களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களை தண்டிக்கவும், அவர்களுடைய இராஜாக்களை சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்த கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்”.

பரிசுத்தவான்களின் மகிமையைப் பற்றிய இந்த விளக்கம் திரைக்கு அப்பால்... அதாவது முதலாம் உயிர்த்தெழுதல் நிறைவடைந்தபிறகு அவர்களுக்கு பொருந்தும் என்பதைப்பற்றி இதுவரை நமக்கு எந்த கேள்வியும் இல்லை. ஆனால் அந்த வார்த்தைகளை மிகவும் கவனமாக அலசி ஆராயும்போது, நாம் அந்த அனுமானத்தில் மிகவும் உறுதியாக இருக்கமுடியாது என்று நம்மை முன்னெச்சரிக்கிறது. பரிசுத்தவான்களின் ஒருபகுதியினர் திரைக்கு அப்பால் மகிமையிலும். திரைக்கு இந்தப்புறம் மாம்சத்தில் இருக்கிறவர்கள், அவர்களுடைய கர்த்தரின் சந்தோஷத்திற்குள் முழுமையாக பிரவேசித்து, அவருடைய வேலையில் பங்குகொள்வார்கள். இதற்கான காலம் வருவதற்கு ஒரு வெளிப்படையான சாத்தியம் உள்ளதை நாம் ஆலோசனையாக கூறுகிறோம்.

“தங்கள் படுக்கையின்மேல் கெம்பீரிப்பார்கள்” என்ற வாக்கியத்தை வேதத்தில் மற்ற இடங்களில் உள்ள இதற்கொத்த கூற்றுக்களின் முக்கியத்துவத்தோடு இசைவாக்கி, அதன் உட்பொருளை வெளிப்படுத்துகையில், இந்த வெளிப்பாடு மகிமையில் உள்ள பரிசுத்தவான்கள் மாபெரும் சந்தோஷத்தின் நற்செய்திகளை சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்பதை முக்கியப்படுத்துகிறது. அதாவது, மற்ற எவரும் கற்கமுடியாத செய்திகளை, லட்சத்து நாற்பத்துநாலாயிரம் பேர் பாடிக்கொண்டு, மெல்லிசையான தொனியில் வழங்கிக்கொண்டிருப்பார்கள். ஆனால் இங்கு படுக்கை என்ற வார்த்தை, வேதத்தில் மற்ற இடங்களில்

பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இசைவாயிருந்து, விசுவாசத்தின் இளைப்பாறுதலை அடையாளப்படுத்துகிறது. அதாவது, இந்த பரிசுத்தவான்கள் எதிரான சூழ்நிலைகளின் மத்தியில் இளைப்பாறுதலில் இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்துகிறது. முதலாம் உயிர்த்தெழுதலின் ''மாற்றத்தை'' அனுபவித்திருக்கிறவர்களுக்கு இதை குறிப்பிடுவதாக இருந்தால், அது அரிதாக இருக்கும். அவர்களுடைய இளைப்பாறுதல், விசுவாசத்தின் இளைப்பாறுதலாக இருக்காது. மாறாக, இளைப்பாறுதலுக்குள் முழுமையாக நுழைந்ததாக இருக்கும்.

மறுபடியும், தீர்க்கதரிசனத்தின்படி, அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி இருக்கும்போது, அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்த ''இருபுறமும் கருக்குள்ள பட்டயம்'', மற்ற இடங்களில் குறிப்பிடப்பட்டதுபோல், தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது. திரைக்கு அப்பால் உள்ள பரிசுத்தவான்கள் தேவனுடைய வார்த்தையை கையாள்வதை அரிதாகவே கற்பனை செய்து பார்க்கமுடியும். அதற்கு மாறாக, இங்கு விவரிக்கப்பட்டுள்ள பரிசுத்தவான்கள், திரைக்கு இந்தப் புறத்தில் இருந்து, தேவனை உயர்த்தும் துதியுடனான தொடர்பில், தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை பயன்படுத்துகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுவதாக காணப்படும். அதாவது, இருண்ட யுகத்தின் அறியாமை, மூடப்பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் மூலமாக, அவருடைய நாமத்தோடு ஒட்டியுள்ள அவமதிப்பிலிருந்து தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறது.

''ஜாதிகளிடத்தில் (புறஜாதிகளிடத்தில்) பழிவாங்கவும், ஜனங்களை(இஸ்ரயேல் ஜனங்களை) தண்டிக்கவும், இந்த பரிசுத்தவான்கள் அந்த பட்டயத்தைப் பயன்படுத்துவார்கள் என்ற அடுத்தகூற்று, இந்த பரிசுத்தவான்கள் எந்த நிலைமையில் இருந்தாலும் அதிகாரத்தில் இருப்பார்கள் என்பதை சுட்டிக்காட்டுவதாக காணப்படுகிறது. ஆனால் வேதத்தில் எங்கும் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைஉத்தரவு என்னவென்றால், ''காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்பு சொல்லாதிருங்கள்'' என்பதேயாகும். எனவே இந்த சங்கீதம், உலக ஜனங்களை பொறுத்தவரையிலும், அதேபோல் தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரயேலரைப் பொறுத்தவரையிலும், எந்த சமயத்தில் அவர்கள் நியாயந்தீர்க்கும் வேலையைச் செய்கிறார்கள் என்பதை விவரிக்கிறது.

## ஏறக்குறைய அதேபோன்ற ஒரு வேதப்பகுதி

மகிமையில் இருக்கிற கிறிஸ்துவைப் பற்றி ஓரளவு ஒத்த விளக்கம், வெளிப்படுத்தல் 19:11இல் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே ''உண்மையும் சத்தியமுமுள்ளவர்'' என்று அழைக்கப்படுகிற அவர், ''நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்''. ''பரலோகத்தின் சேனைகள்'' அவருக்குப் பின்சென்றார்கள்''(வச.14). ''தேசங்களை(புறஜாதிகளை) வெட்டும்படி அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது(வச.15).

இந்த தீர்க்கதரிசனம் பரலோக சேனைகளைப்பற்றி ஏன் பன்மையில் பேசுகிறது என்று நமக்குத்தெரியாது. ஆனால் பரலோக சேனைகள் இரண்டு பிரிவாக இருக்க சாத்தியம் உண்டு. அதாவது, ஒன்று திரைக்கு இப்புறமும், மற்றொன்று திரைக்கு அந்தப்புறமும் இருக்கலாம் என்று மட்டுமே பரிந்துரைக்கிறோம். நாம் காண்பதற்கு காத்துக்கொண்டிருக்கிறோம், நாம் காத்திருக்கும்போது வெறுமனே கவனித்துக்கொண்டிருக்கிறோம். பிதாவின் வார்த்தையை இன்னும் அதிக கவனத்துடன் பார்ப்பதைவிட சாதகமானது எதுவும் இல்லை. திரைக்கு இந்தப் புறத்தில் நியாயத்தீர்ப்பை செயல்படுத்த கர்த்தருடைய ஜனங்களுக்கு எந்த பொறுப்பு கொடுக்கப்பட்டாலும் அது மிக தெளிவாக இருந்து, சந்தேகத்திற்கு இடங்கொடாமல் இருந்து, தேவனுடைய பரிசுத்தவான்கள், இருக்கிற அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருக்கவேண்டும் என்ற இந்த யுகம் முழுவதற்குமான தெய்வீகத் தேவையை நினைப்பூட்டுகிறது. இந்த உத்தரவிலிருந்து அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு செய்யவேண்டும் என்ற கட்டளையின் விளைவு தரும் எந்த மாற்றமும், அதை செயல்படுத்துவதற்கு முன் மிகவும் நேர்மறையாகவும், மிகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ளப்பட வேண்டியது தேவையாயிருக்கும்.

இராஜாக்களும் மேன்மக்களும் – அதாவது, பொருளாதார, அரசியல், மற்றும் சமூக மேன்மக்களும்.. எவ்வாறு கட்டப்படுவார்கள் என்பது, நாம் தகுதியடையும்வரை நமக்குத் தெரியாது. ஆனால் இவை எல்லாவற்றின் வெளிவேலையானது, சங்149:7,9ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; ''எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்துவார்கள்'' ''இந்த கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்'' என்று இருக்கும். இந்த வேலையில் நாம் திரையின் இந்தப் புறத்திலிருந்தோ அல்லது திரையின் அந்தப் புறத்திலிருந்தோ பங்குகொண்டாலும் எந்த வித்தியாசத்தையும் உண்டாக்காது. கர்த்தருடைய பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின் கீழ், எந்த நிகழ்விலும், எந்த நேரத்தில் நாம் எதைச் செய்தாலும், நீதியுடன்

இசைவில் இருந்து, எல்லா சமயங்களிலும் அனுதாப அன்புடன் ஒன்றற கலந்ததாக இருக்கும். தேவனுடைய பரிசுத்த ஆவியை அடைந்திருந்து, அதனால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள் தவிர, வேறு எவரும் இராஜ்ஜியத்தின் மகிமைகள் மற்றும் அதிகாரத்தில் பங்குகொள்ள எப்போதும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

----------

"பொறுமையுடன் அடிபணிந்திரு;
களைப்புற்ற வழியினூடே நடக்கும் ஒவ்வொரு அடிக்கும் – பெலன் கொடுக்கப்படுகிறது

மந்தமான இரவு பரிபூரண நாளுக்கு இடம் கொடுக்கும்போது,

அதற்காக நீங்கள் அனைவரும் பரலோகத்திற்கு துதி செலுத்துவீர்"

ஆம், பரிபூரண நாள், நித்திய தேவனுடைய நாள்,

மேகம் அந்த காட்சியின்மீது புலம் பெயராதபோது

எங்கும் பிரகாசமும், புத்துணர்ச்சியுமுள்ள அந்த அழகுள்ள தேசத்தில்

நாம் கிறிஸ்துவுடன் இருப்போம்,
இடையே ஒன்றுமிருக்காது"

"அப்போது, அன்பிற்குரிய இதயமே, காத்திரு; உன் வருத்தமான உணர்வுகளைக் கட்டுப்படுத்து"

சீறும் ஒவ்வொரு காற்றையும் அலையையும் தேவன் அடக்குவார்;

வாழ்க்கைச் சமுத்திரத்தைக் கடந்து அந்த பயணம் முடியும்போது;

இனிமையான இளைப்பாறுதலின் புகலிடம் இரட்சிப்பளிக்கும் !"

----------

R5470

## வார்த்தைகளினாலே நீதிமானாகவோ குற்றவாளியாகவோ தீர்க்கப்படுதல்

## JUSTIFIED OR CONDEMNED BY WORDS

"ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" – மத்தேயு 12:37.

இங்கே நம்முடைய கர்த்தர் பயன்படுத்தின, "நீதிமானாக தீர்க்கப்படுவாய்" என்கிற பதமானது, புதிய ஏற்பாட்டில் பொதுவாக குறிப்பிடப்படும் நீதிமானாக்கப்படுதல் என்னும் பதமல்ல. பரிசுத்த பவுல் எழுதுகின்ற,"விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்" என்பது, இயேசுவை தங்கள் இரட்சகராக தங்கள் இருதயத்திலிருந்து ஏற்றுக்கொண்டவர்கள், தேவனுக்கு முன்பாக தடைநீக்கப்படுவதாகும். "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்". நம்முடைய நீதிமானாக்கப்படுதல், தேவன் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையிலேயே உள்ளது. விசுவாசமில்லாமல் அவருடைய குடும்பத்திற்குள் நம்மால் வரமுடியாது. ஜீவனுள்ள விசுவாசம் கிரியைகளால் தன்னை வெளிக்காட்டுகிறதாய் இருப்பதாக, அப்போஸ்தலராகிய யாக்கோபு அறிவிக்கின்றார். நம்மால் செய்ய முடிகின்ற நற்கிரியைகளால் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பதை தேவனுடைய ஏற்பாட்டில் அவர் அதை அவசியமாக்கியுள்ளார். ஆகவே அவருடைய உயிர்த்தெழுதலில் பங்காளிகளாகும்படியாக, விசுவாசமும் கிரியையும் ஒன்றிணைந்து நம்மை கிறிஸ்துவினுடைய குணலட்சண சாயலுக்குள் கிட்டிச் சேர்க்கின்றன. நமக்கு விசுவாசம் மாத்திரமே இருந்து, கிரியைகள் இல்லாவிடில், நாம் ஒருபோதும் இலக்கை அடையமுடியாது. அவ்வாறே, நாம் விசுவாசமில்லாமல் அனைத்து கிரியைகளையும் செய்தாலும் நாம் தோல்வியடைவோம்.

ஆனால் "உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" : இங்கே நமது கர்த்தர் திருச்சபைக்கு முகவரியிட்டுப் பேசவில்லை, இவ்வாக்கியம் உரைக்கப்பட்டு சிறிதுகாலத்திற்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளில் ஆவியால் ஜெனிப்பிக்கப்படும்வரையிலும், யாருமே முழுமையான நீதிமானாக்கப்படுதலுக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இவ்வார்த்தைகள், அப்போது கடிந்துகொள்ளப்பட்டிருந்த பரிசேயர்களிடம் பேசப்பட்டவைகளாகும். நீதிமானாக்கப்படுதல் என்னும் பதமானது ஒரு வரையறுக்கப்பட்ட தன்மையில் இங்கே பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, நாம் செய்த சில பரிவர்த்தனைகளைப்பற்றி நாம் பேசும்போது, அப்போது இவ்வழிமுறையைப் பின்பற்றுவது எனக்கு நியாயமாக இருப்பதாக உணர்ந்தேன் என்று கூறுவோம். இவ்விதத்தில்தான் இயேசுவும் இங்கே இந்த வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ், தேவனுடன் ஒரு விசேஷித்த உறவினைப் பெற்றிருப்பதாகவும், குறிப்பாக பரிசுத்தமாக இருப்பதாகவும் கூறியவர்களுக்கே அவர் முகவரியிட்டுப் பேசினார். யூதர்கள் ஜீவனுக்கு ஏதுவாக நீதிமானாக்கப்படவில்லை, மாறாக தேவனோடு ஐக்கியங்கொள்வதற்காக மாத்திரமே நீதிமானாக்கப்பட்டிருந்தனர். இப்போது அவர்கள் தங்கள் தகுதியை நிரூபிப்பார்களா ? என்னும் தங்களது சோதனைக்காலத்தில் இருந்தார்கள்.

### தங்களது சந்திக்குங்காலத்தை அறியாமற்போகுதல்

அவர்கள் ஒரு சோதனைக்காலத்தில் இருந்ததை, அவர்கள் உணராதிருந்தனர் என்று நாம் வாசிக்கின்றோம். அதாவது ஒரு ஜனங்களாக, அவர்கள் அவருடைய ஊழியக்காரர்களாகத் தொடரப் போகிறார்களா இல்லையா என்பது குறித்து, தேவனுடைய ஒரு குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பின் கீழாக வந்திருந்தார்கள். ‘‘அவர்களைச் சந்திக்குங்காலத்தை அவர்கள் அறியாமற்போனார்கள்’’. நமது கர்த்தர் எருசலேமுக்குச் செல்லும்போது, ‘‘இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழக்கிவிடப்படும் !’’ என்று கூறினார். அக்காலத்தில் அவர்கள் வீட்டின் பணிவிடைக்காரர்களாக, விசேஷித்த தயவினைத் தொடர்ந்து பெற தகுதியற்றவர்களாகிப் போனார்கள். மூன்றரை ஆண்டுகளாக அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வகையான தயவு காண்பிக்கப்பட்டுவந்தது. அவர்கள் மத்தியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. ஆனால் அந்த சுவிசேஷமோ தேசத்தை ஈர்க்கும் வண்ணமாக இருக்கவில்லை. மாறாக அத்தேசத்தில் விசுவாசத்தில் உண்மையுள்ளோராய் மீந்திருக்கிற உத்தம இஸ்ரயேலரை மாத்திரமே ஈர்க்கும் வண்ணமாக இருந்தது. மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, எழுபதாவது வாரம் முடிவடைந்த நிலையில், யூதர்களுக்கான கர்த்தரின் தயவு நிறுத்தப்பட்டது. அன்றிலிருந்து புறஜாதியாருக்கு கதவானது திறக்கப்பட்டது. அப்போதிருந்து யூதர்களுக்கு மற்றவர்களைக்காட்டிலும் எவ்வித ஒப்புயர்வற்ற நிலையும் இராமற்போனது.

பரிசேயர்கள் தேவனுக்கு முழுமையான பிரதிஷ்டை செய்திருப்பதாகவும், மாபெரும் பரிசுத்தத்தைப் பெற்றிருப்பதாகவும் காட்டிக்கொண்டனர். அவர்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கியும், தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கியும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களை விரும்பியும், பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணியும், ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளை விட்டுவிட்டவர்களாயும், மேலும் அவர்களுடையதோ நியாயப்பிரமாணத்தின் வெளிப்புறமான, சிரத்தையற்ற அனுசரிப்பாக மாத்திரமே செய்து வந்தார்கள் என்று இயேசு அவர்களிடம் கூறினார்(மத்தேயு23:5,6,14,23–25). உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்றே நியாயப்பிரமாணம் கட்டளையிடுவதாக அவர் அறிவித்தார். மேலும் அவர்கள் ‘‘விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறார்கள்’’ என்று அவர் குற்றஞ்சாட்டினார். அப்பெண்களுக்கென்று இயல்பான காப்பாளர்கள் இல்லை என்ற நிதர்சனத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த அவர்கள் தயாராக இருந்தனர். வீதிகளின் சந்திகளில் நின்று ஜெபம் செய்வதன்மூலம், அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று அவர் அவர்களிடம் கூறினார்.

### வார்த்தைகள் இருதயத்தை வெளிக்காட்டும் ஒரு குறியீடாகும்

‘‘உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்’’ . இதை தெளிவாகக் கூறவேண்டுமானால், அவர்கள் தேவனுடைய விசேஷித்த தயவினை இழக்க நேரிடும் என்பதாகும். அவர்கள் தங்களின் வார்த்தைகளால் தங்களை நேர்மையில்லாதவர்கள் என்று நிரூபித்தனர். அவர்கள் இயேசுவின் நற்கிரியைகளை உணர்ந்தறிந்தார்கள், ஆனால் பொறாமை மற்றும் வெறுப்பு ஆகியவற்றின் மூலம், அவர்கள் அவருக்கு எதிராக எல்லாவிதமான தீமைகளையும் சொல்லி, அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவருக்கு எதிராக அவர்கள் சொன்ன அனைத்துமே அவர்களின் உண்மையான இருதய நிலையைக் காண்பித்தன. தேவனுடைய தயவிற்கு தங்களைத் தாங்களே தகுதியற்றவர்கள் என்று வெளிப்படையாக நிரூபித்தனர். ஆயினும், யூதர்கள் நித்தியத்திற்கும் தேவதயவற்ற நிலையின்கீழாக வந்தார்கள்

என்று நாம் கருதிவிடக்கூடாது. இந்த சுவிசேஷ யுகத்தின்போது அவர்கள் விசேஷமான சிட்சைகளுக்கு உட்பட்டு வந்துள்ளனர். அவர்கள் அதீத உபத்திரவங்களை அடைந்திருந்தனர், தேவன்மீது அவர்கள் வைத்த விசுவாசம் அவர்களுக்கு இந்த உபத்திரவத்தைக் கொண்டுவந்தது.

யூத யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்த அந்த நாற்பது ஆண்டுகளில், தேவனுடைய கோபமானது அவர்கள்மீது "முற்றுமுடிய" வந்தது. கிபி 70ம்ஆண்டின் இறுதியில் தேசமோ பாழாய்ப் போனது. ஆனால் ஜனங்களோ இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் கூடியவிரைவிலேயே தேவதயவுக்கு முழுமையாகத் திரும்புவார்கள். அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டிருக்கிறார்கள். ஆதியிலிருந்தே செய்யப்பட்ட ஏற்பாட்டில் அவர்களுக்கு இன்னும் ஒரு பங்கு உண்டு. எனவே அவர்களின் கண்டனமானது ஒரு நித்தியமான கண்டனமல்ல. ஆனால் அவர்கள் பிரதான ஆசீர்வாதத்தை இழந்துவிட்டார்கள்.

இவர்தான் மேசியாவென எங்களால் இன்னும் அறியமுடியவில்லை. ஆனால் அவரிடத்தில் ஏதோ ஓர் அற்புதமான வல்லமை இயங்குகிறது என்று நாங்கள் நம்புகின்றோம் என அவர்கள் கூறியிருப்பார்களானால், அவர்கள் இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பார்களானால், அவர்கள் சரியான வழியை அறிந்துகொள்ள விரும்புவதாகத் தங்களை நிரூபித்திருப்பார்கள். குறிப்பாக, பெந்தெகொஸ்தேவுக்குப் பிறகு இன்னும் சிலருக்குக் காண்பிக்கப்பட்டதைப் போலவே, தேவன் அவர்களுக்கும் அவ்வழியைக் காண்பித்திருப்பார். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்கள் வார்த்தைகளாலும் நடத்தையினாலும் நீதிமானாக்கப்பட்டிருக்கக் கூடும். இருப்பினும், அவர்களுக்கு சரியான இருதய நிலை இல்லாதேபோனதால், அவர்கள் அந்த வார்த்தைகளைப் பேசவில்லை. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்". அவர்களின் இருதய மனப்பான்மை அவர்களின் வார்த்தைகளில் காண்பிக்கப்பட்டது, அவர்களுடைய தேசத்திற்கான தயவானது நிறுத்தப்பட்டது.

### எது தீமை பேசுதலை உருவாக்குகிறது ?

அப்போஸ்தலர் பவுல் கூறுகையில்,"ஒருவனையும் தூஷியாமல்.." என்கிறார். எந்த விசுவாசப்பிரமாணத்தையும் தூஷியாமல் என்று அவர் சொல்லவில்லை, சில விசுவாசப் பிரமாணங்கள் மிகவும் தீயதாக பேசப்படவேண்டும்! அவ்வாறு பேசுவது அவைகளால் கட்டுப்பட்ட ஜனங்களுக்கு நன்மையே செய்யும். நாம் ஒரு தீய கொள்கையைப் பற்றி தீமை பேசக்கூடாது என்று அவர் சொல்லவில்லை, மாறாக, இங்கு அவர் இக்காரியத்தை ஒரு தனிநபருக்கு பொருத்திப் பேசுகிறார். மனுக்குலத்தை –தீமையைச் சிந்திப்போராக, தீமையைப் பேசுவோராக, தீமையைச் செய்வோராக வேதாகமம் பேசுகின்றது. இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது, அவர்கள் அனைவரும் தடை ஆணையின்கீழாக இருக்கிறார்கள். முழு உலகமே பாவிகள்தான் என்று சொல்வது தீமை பேசுதலாகாதே. ஏனென்றால் அனைவருக்கும் உண்மை தெரியுமே. எல்லா மனிதர்களும் பாவிகளே என்பதை ஒவ்வொரு மனிதனும் தெரிந்துகொள்ளவேண்டும், அது உண்மை தான். பாவம் மேலோங்கியிருக்கின்றது.

ஆனால் நாம் தனிநபர்களுக்கு என்று வரும்போது, நாம் ஆபத்தான இடத்திற்கு வந்திறங்குகின்றோம். இயேசு பரிசேயர்களை மாயக்காரர்கள் மற்றும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாக இருக்கிறீர்கள் என்று சொன்னார். அவர் இவ்வாறு ஒரு தனிநபரைக் குறிப்பிட்டு கூறவில்லை, மாறாக அவர் அவ்வமைப்பையும், ஒரு வகுப்பாரைப்பற்றியுமே தீமை பேசினார். ஆக, நம் சட்டைப்பைகளிலிருந்து பொருள்களைக் களவு செய்பவர்களைக் கவனத்திற்குக் கொண்டுவரும்போது, நாம் நம் அயலகத்தார் யாரையும் அவமதிப்பு செய்யவேண்டிய அவசியம் இல்லையே! ஆனால் நாம் ஒரு நபரைத் தனிமைப்படுத்தி, அவரைப்பற்றி தீமை பேசும்போது, வேத வசனங்களின்படி அவசியமான காரியம் இருந்தால் தவிர, மற்றபடி தவறுகிறவர்களாய் இருக்கிறோம். களவு செய்கிற ஒருவரைப்பற்றி தங்களுக்குத் தெரிந்தால் , அவரைக் கைதுசெய்யவைக்க வேண்டியதே சரியான வழியாகும். ஒரு காலத்தில், ஒரு குறிப்பிட்ட நபர் களவு செய்பவராக இருந்தவர் என்று உங்களுக்குத் தெரிந்தால், அவர் இப்போதும் அப்படியாக இருப்பார் என்று கவனிக்கவேண்டிய அவசியமில்லை, அவர் சீர்திருத்தப்பட்டிருக்கலாம்.

ஆகையால், களவு செய்பவர்களைக் குறித்து ஆலோசனைகளை வழங்கும்போது, நமக்கு நேர்மறையான அறிவு இல்லையெனும்வரை, இந்த நபரையோ அல்லது அந்த நபரையோ தனிமைப்படுத்திப் பேசுவது சரியானதல்ல. இன்றளவும் சிறைச்சாலைகளுக்குப் பின்னால் சிலர் இருந்துகொண்டு, சத்தியத்திற்கும் நீதிக்கும் ஊழியம் செய்கிறார்கள். எனவே சிறைக்கம்பிகளிலிருந்து விடுபட்டு வெளியேவந்த சிலருடனும் அது இப்படியாக உள்ளது. வாழ்க்கையில் முன்புசெய்த சில தவறான நடத்தைகள் காரணமாக, ஒருவரைத் தொடர்ந்து நிந்திப்பதோ முத்திரை

குத்துவதோ சரியானதல்ல. யார் மீதும் பழிசுமத்துவதும் எதிர்காலத்தில் ஒரு நேர்மையான நடைமுறையில் நடப்பதிலிருந்து அவரைத் தடுப்பதும் சரியானதல்ல. இப்போது நீங்கள் ஒரு சுதந்திர மனிதர். நீங்கள் சரியானதைச் செய்ய உறுதியாக இருக்கிறீர்கள் என்றே நான் நம்புகிறேன் என்று நாம் சொல்வதே சாலச்சிறந்ததாகும். இதன் விளைவு நன்மையானதாக இருக்கும் – அதாவது தன்னுடைய கடந்த காலத்தைப் பற்றி அறிந்த ஒருவர், தனக்கு உதவ தயாராக இருக்கிறார் என்பதைக் காண அனுமதிக்கச் செய்வதாகும். ஆனால் அவர் சரியானதைச் செய்வதற்கு எந்த உறுதியும் அளிக்கவில்லை என்றால், மற்றவர்களை அவருக்குக் காவல்வைக்க நாம் தயங்கக் கூடாது. அவர் சரியானதைச் செய்யத் தயாராக இருப்பாரானால், அவருடன் நாம் எல்லா வகையிலும் ஒத்துழைக்கவேண்டும்.

### தீயனபேசுதலில் நிறைந்திருக்கும் உலகம்

உலகில் அதீத தீமை பேசுதல் இருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. உலகமே அதினால் நிறைந்துள்ளது. “நீங்கள் ஒரு யானையை வால் மூலம் தூக்கி எறியும் அளவுக்கு அந்த மனிதனை நான் நம்புவேன்” என்று வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு மனிதன் இன்னொருவனைப் பற்றி அடிக்கடி சொல்வான் – அதாவது, அவனுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கின்றது என்று சொல்லும் விளக்கப்பட வகையில் கூறுதலாகும். மற்றொரு வாக்கிய வெளிப்பாடு என்னவென்றால், குளிர்ந்த நீர் நிறைந்த ஒரு பாதாள அறையுடன்கூட நான் அவரை நம்பப்போவதில்லை! உலகம் கிறிஸ்துவின் பள்ளிக்குள் இன்னும் வரவில்லை; சபைதான் வந்துள்ளது. ஆகவே, ஒருவனையும் தூஷிக்கலாகாது என திருச்சபைக்கே குறிப்பாக அறிவுறுத்தப்படுகின்றது. நிச்சயமாக, நம்முடைய விழுந்துபோன மாம்சமானது கிட்டத்தட்ட எல்லாவற்றையும் ‘தவிர்க்க’ பார்ப்பதும், இன்னொருவருக்கு அநுகூலமற்ற ஒன்றைச் செய்வதில் நம்மை நியாயப்படுத்தக்கூடிய ஒரு வழியை சிந்திக்க முயற்சிப்பதும் இயல்பானதே. மேலும் கர்த்தருடைய ஜனங்கள்கூட, தீயன பேசுவதற்கு என்ன மன்னிப்பை அடையமுடியும் என்றும், ஆயினும் கண்டிக்கப்படாதிருக்க வேண்டும் என்றும் தங்களைச் சுற்றிலும் அடிக்கடி பார்ப்பதாக காணப்படுகிறது.

### மனித இருதயமானது மிகவும் வஞ்சகமானது

தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய விரும்பும் இருதயம் இருக்கின்றது என்றும், ஆகவே அவர்களில் யாரும் கர்த்தருடைய சித்தத்திற்கு முரணானதைச் செய்ய விரும்புவதில்லை என்றும் நம்பி யூகித்துக்கொள்ள வேண்டும். ஆனால் விழுந்துபோன மனித இருதயத்தில் மிகவும் வஞ்சிக்கிற காரியங்கள் சில இருக்கின்றன. இவை, உலகத்தில் எந்தக் காரியத்தைச் செய்ய பயன்படுத்தப்பட்டதோ அதையே செய்ய தீர்மானமாய் இருக்கும். மக்களைப் பற்றி எதையும், எல்லாவற்றையும் சொன்னாலும் அதைக் குறித்து சிந்திக்காத உலகின் ஜனங்களை நாம் அறிவோம். இரகசியம் என்று ஒருவரிடம் கூறும்போது, தான் கூறுகின்ற நபர் அவ்விஷயத்தை வேறு நபருக்கு ஐந்து நிமிடங்களில் கிசுகிசுப்பார் என்றறிந்து, அவர்கள் அதை அடிக்கடி கிசுகிசுப்பர். அது உண்மை என்று அவர்களுக்குத் தெரியாதபோதிலும், அதை கைக்கொள்வது மிகவும் “நல்லது” போல எண்ணி இவ்வாறு செய்வர். இதுபோன்ற ஒரு நேர்த்தியான விஷயத்தை மற்றவர்களும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்! அவர்கள் அதை சிறிதுநேரம் தங்கள் நாக்கின் கீழ் வைத்து ஓர் இனிமையான துணிக்கையாக மென்றுவிட்டு, அதை எடுத்துச்செல்ல தாங்கள் உதவும் நோக்கில், அதை மற்றவர்களிடம் கூறுவதற்கு விரைந்து செல்கிறார்கள்! தீமையானது வெளியேறுவதற்கு பற்றியெரிகின்றது.

ஒரு நபரைப் பற்றின உண்மையைச் சொல்வது தவறல்ல என்று ஒருவர் கூறுகின்றார். ஆம், அது தவறாகத் தான் இருக்கும்! ஆனால் மேரி ஜோன்ஸ் எனக்கு கடன்பட்டிருப்பதாக நான் ஜான் ஸ்மித்திடம் சொல்லவில்லையென்றால், அவர் அவளை நம்பக்கூடும். ஏனென்றால் அவள் அவர்களிடம் கடன்பெறக்கூடும் என்பதினால், மற்றவர்களிடம் சொல்லவேண்டும். நான் அதிகமாகவெல்லாம் பேசமாட்டேன், நான் என் தோள்பட்டையை அசைத்து (எனக்குத் தெரியாது என்பதற்கான சைகை) தலையை ஆட்டி, நீங்கள் கவனமாக இருங்கள், இல்லையென்றால் கடிபடுவீர்கள் என்று கூறுவேன்! எனவே அந்நபர் செலுத்த வேண்டியது ஒரு நாணயமாக மாத்திரமே இருந்தாலும், அவள் ஆயிரம் டாலர் மதிப்புள்ள காயத்தை ஏற்படுத்தக்கூடும்.

நாம் சொல்லத் துடிக்கும் ஏதோவொன்று நமக்கு அது தொடர்ந்து வலியை ஏற்படுத்துவதை நாம் உணர்கிறோமா? அப்படியானால் நாம் ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாகப் போகக்கடவோமாக. அப்போஸ்தலர் பவுலின் உத்தரவைப் பின்பற்ற ஆவலுடன் முயற்சிப்போமாக; “சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது, ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்” – எபேசியர் **4:31,32.**

## கர்த்தரின் ஜனங்களுக்கு முக்கியமானது

பிரியமான சகோதர சகோதரிகளே, தீமை பேசுதல் என்னும் இந்தவிஷயம், கிறிஸ்தவர்களுக்கான பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது என்று நம்புகிறோம். அதாவது, அது மற்றவர்களின் நற்பெயரைக் குறித்ததாய் இருக்கும்போது, நம்முடைய சமாதானத்தை எப்படி, எப்போது, எங்கு காக்க வேண்டும் என்பதை அறியவேண்டும். சிறையில் இருந்துவிட்டு, பின்னர் விடுதலையான ஒரு சகோதரரைப் பற்றி எங்களுக்குத் தெரியும். அவர் வெளியே வந்ததில் மகிழ்ச்சி அடைவதாக எங்களிடம் கூறினார். சிறையில் இருந்ததைப் பற்றி இதுவரை யாரிடமாவது கூறியிருக்கிறீர்களா ? என்று நாங்கள் கேட்டோம். ஆம் என்று அவர் பதிலளித்தார். சரி, மீண்டும் அதனைச் சொல்லாதீர்கள், இது தெரிந்தால், கர்த்தருடைய ஜனங்களில் வெகுசிலரே உங்களை நம்புவார்கள். நீங்கள் சொன்னவர்களிடம் நாங்கள் சென்று, அதை ஒருபோதும் வெளியே கூறவேண்டாம் என்று கூறுவோம் வாருங்கள் என்றோம். இதுபோன்ற விஷயங்களைப் பற்றி பேசுவது நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் இயல்பாகும்.

## தீமை பேசுதல் வரையறுக்கப்பட்டுள்ளது

நிச்சயமாக, முட்டாள்தனமான மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் சாதகமற்ற விஷயங்களைக் கூறிக்கொண்டிருப்பார்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் தங்களைப் பற்றி இழிவான எதையும் சொல்லத் தயாராக இருக்கமாட்டார்கள். அப்படியிருக்கும்போது, யாரைப்பற்றியும் தீங்கு விளைவிக்கும் எதையும் நாம் சொல்லலாகுமா ? என்று நாம் நிதானித்து சிந்திக்கவேண்டும். சூழ்நிலைகள் மாற்றப்படுமானால், நான் அவருடைய இடத்திலிருந்து, அவர் என்னுடைய இடத்தில் இருந்தால், அவர் என்னைப்பற்றி இவ்வாறு சொல்ல விரும்புவேனா ?

ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் சட்டைப் பையிலிருந்து திருடுவதைக் கண்டால் எப்படி இருக்கும் ? அவர் கைதுசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதில் உள்ள நம்முடைய முடிவை முழுமையாக நியாயப்படுத்துவோம். ஏனென்றால், அது அந்த மனிதனுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, மிகவும் உகந்த காரியமென்று நாம் நினைப்பதாலேயே ஆகும். திருடன்! திருடன்! என்று கூச்சலிடுவதும், அவரைக் கைதுசெய்ய வைப்பதும் தான் சரியானது என்று நாம் நினைப்போம்.

நாம் நிச்சயித்தவரை, இன்னொருவருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் உள்ள எதையுமே பேசுவது, அதாவது ஒரு விதத்தில் அல்லது சூழ்நிலைகளில், அது நமக்குப் பொருத்தினால், நாம் கொடூரமான மற்றும் தீங்கு விளைவிக்கும் என்று நினைக்கக்கூடிய வகையில் உள்ள எதையுமே பேசுவது தீமை பேசுதலாகும். சில சந்தர்ப்பங்களில், தவறு செய்துவந்த ஒருவரைப் பற்றி நாங்கள் அறிந்திருந்தோம். அவர் அத்தகைய போக்கைத் தொடர்ந்து பின்பற்றினால், இவ்விஷயத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது எங்களது கடமையாக இருக்குமென்றும், மாறாக, அவர் தனது போக்கை கைவிடுவார் என எங்களுக்கு உறுதியளித்தால், நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம் என்றும் நாங்கள்அவருக்கு செய்தி அனுப்பினோம். இவ்வகையில் பல சந்தர்ப்பங்களில், அந்நபர் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பதிலிருந்து தடுக்கப்பட்டார். மேலும், அநேகமாக ,உலகில் வேறு எந்த நபருக்கும் தெரியாத, எங்களுக்கு மாத்திரம் தெரிந்திருந்த அந்நபரது விஷயத்தைப் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடுவதிலிருந்து நாங்களும் காப்பாற்றப்பட்டோம்.

உன்னதத்திலிருந்து வரும் ஞானம் நமக்கு தேவைப்படுகின்றது. இந்த அணுகுமுறை கிறிஸ்தவ குணலட்சணத்தின் அவசியமான வளர்ச்சியைக் குறிக்கின்றதாக நாங்கள் நம்புகிறோம். நாம் உண்மையிலேயே நம்முடைய அயலாரின் நன்மையையும், நம்முடைய சொந்த நன்மையையும் வாஞ்சிப்பவர்களாய் இருந்தால், அவர் நம்மை கனம் பண்ண விரும்புவதைப்போலவே அவரையும் நாம் கனம்பண்ண விரும்பினால், ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ,அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' என்னும் பொன்னான பிரமாணத்தை நாம் பின்பற்றவேண்டும்.

ஒரு மதச்சார்பற்ற பத்திரிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட, பின்வரும் ஒளிர்கிற சிறிய குறும்பாடலை நாம் நினைவில் கொள்வதன்மூலம், பெரும்பாலான தீய பேச்சு தவிர்க்கப்படக்கூடும். இங்குள்ள உணர்வானது ஆரோக்கியமானதும், வேதாகமப்பூர்வமானதுமாகும்.

''உங்களால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்யுங்கள்,
உங்களால் முடிந்த எல்லா வகைகளிலும்,
உங்களால் முடிந்த எல்லா வழிகளிலும்,
உங்களால் முடிந்த எல்லா இடங்களிலும் செய்யுங்கள்,
உங்களால் முடிந்த எல்லா நேரங்களிலும் செய்யுங்கள்,
உங்களால் முடிந்த அனைத்து ஜனங்களுக்கும் செய்யுங்கள்
உங்களால் எவ்வளவு காலம் முடியுமோ, அவ்வளவு காலம் செய்யுங்கள்''.

பரிசுத்த பவுலும் இதே கருத்தைச் சுருக்கமாக,''ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் நன்மை செய்யக்கடவோம்'' – கலாத்தியர் 6:10 என்னும் வார்த்தைகளில் கூறுகின்றார்.

---

R 5473

# “திராட்சத் தோட்டத்தில் வேலையாட்கள்”

## LABORERS IN THE VINEYARD

**ஆதார வசனங்கள் : மத்தேயு 20:1–16.**

**திறவுகோல் வசனம் : மத்தேயு 5:45** “இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்”

இந்த உவமையை, அதன் அனைத்து உண்மை அம்சங்களோடும் நிறைவேறுவதை காணும் வகையில் விளக்குவது கடினமாகும். மாபெரும் போதகர் அதனைப் பரலோக இராஜ்யத்தின் உவமையென கொடுத்திருந்தார். இவ்வாறாக, இது இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, திருச்சபையின் அனுபவங்களுக்குப் பொருந்தும் என்பதை நம்மால் அறியமுடிகின்றது. குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த யுகத்தின் வெவ்வேறான காலப்பகுதிகளுக்கு, இங்கே வரும் வெவ்வேறான இடைவெளிகளை பிரயோகித்தால், நமக்குச் சிக்கலே மிஞ்சும்; யுகத்தின் ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், ஏனையோரும், யுகம் முழுவதும் ஜீவித்துப் பிரயாசப்படவில்லை. மறுபடியும் இவ்வாறு அதனைப் பொருத்திப் பார்க்கும்போது, யுகத்தின் ஆரம்பத்தில் இருந்தவர்களுக்கு மட்டும் ஒரு பரிசைப் போன்று மதிக்கத்தக்க, திட்டவட்டமான வாக்குத்தத்தம் இருந்ததாகவும், மற்றும் மற்றவர்களனைவரும் ஏற்றது எதுவோ அதனைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற உறுதிப்பாடு மட்டுமே கொண்டிருந்தனர் என்கிற கருத்தினை நாம் எதிர்கொள்ள நேரிடும்.

உவமையை விளக்குவதில் நாம் சந்திக்கும் மற்றொரு சிரமம் யாதெனில், முந்தி அழைக்கப்பட்டுப் பிந்தி கூலியைப் பெற்றவர்களின் முறுமுறுப்பை எவ்வாறு பொருந்தச் செய்வது என்பதாகும். சுவிசேஷ யுகத்தில் முதல்முதலில் அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும் மற்றவர்களும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது ஜீவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னதாகவே, அவர்களுடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்தை அடைவார்கள் என்றே மற்ற வேத வசனங்கள் நமக்குக் காட்டுகின்றன. பரிசுத்த பவுல் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள் என்றும், பின்பு உயிரோடிருக்கும் நம்மிடையே இருப்பவர்களும் மறுரூபமடைவர் என்றும் அறிவிக்கின்றார். மேலும் ஆதிகால திருச்சபையின் அப்போஸ்தலர்களும் மற்றவர்களும், அவர்களுக்கு வழங்கப்படும் வெகுமதியைக் குறித்து முறுமுறுப்பார்கள் என்பதை நினைத்துப் பார்க்கக்கூடமுடியாது.

சுவிசேஷ யுகத்தின்போது திருச்சபையின் ஒட்டுமொத்த அனுபவங்களுக்கும் பொருந்தக்கூடிய இவ்வுவமைக்கான தீர்வைக் கண்டுபிடிக்க நாம் முயற்சிக்கும்போது, இந்தச் சிரமங்கள் அனைத்தையும் சிந்தையில் வைக்கவேண்டும்.

இவ்வுவமையை தேவ ஜனங்களின் தனிப்பட்ட அனுபவங்களுக்குப் பிரயோகிக்க முயற்சித்தாலும், நமக்குச் சிக்கல் ஏற்படும். இதை இப்படியாகப் பொருத்திப் பார்க்கும்போது, தங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை முந்தி ஆரம்பிக்க நேரிட்டவர்கள், ஜீவியத்தின் மாலைவேளையில் கர்த்தருடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டால், அவர்களே முந்தி அழைக்கப்பட்டு பரிசினைப் பெறுவார்கள் என்பதாக நாம் கூற நேரிடும். பிந்தி வருகிற ஏனையோர், கர்த்தர் நிமித்தமாக தங்களது நேரம், வலிமை மற்றும் திறமை ஆகியவற்றின் ஒரு பகுதியை மாத்திரம் கொண்டு ஊழியஞ்செய்வது, பதினோராம் மணிவேளையிலும், பிந்தி அழைக்கப்பட்டவர்களான சிலருக்கு ஒத்திருக்கக்கூடும். எஜமானரின் வேலையில் செலவளித்த நேரத்தைப் பொருட்படுத்தாமல், இவர்களனைவரும் ஒரே மாதிரியான வெகுமதியைப் பெறுவார்கள் என்று உவமைக்கு நாம் விளக்கம் கொடுத்தாலும், முந்தி அழைக்கப்பட்டோர் முறுமுறுப்பு, முறையீடு மற்றும் அதிருப்தியடைந்தனர் என்னும் கூற்றானது இன்னும் நமக்கு சிக்கலையே ஏற்படுத்தும்.

அதற்கு மாறாக, கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய ஜனங்களுக்காக அவருடைய நீதியான அன்பான ஏற்பாடுகளுக்கும் எதிராக முறுமுறுக்கும் எவரும், ஒருபோதும் திரைக்கப்பாலுள்ள இராஜ்யத்தின் பரிசினைப் பெறமாட்டார்கள் என்றே நாம் உறுதியாக நம்புகின்றோம். எஜமானரின் நல்லது என்ற பாராட்டையும், மற்றும் உயிர்த்தெழுதலின் மாற்றத்தைப் பெறும் எவருமே முறுமுறுக்க மாட்டார்களென்று நாம் உறுதியடையலாம். தங்களுடைய ஒவ்வொரு சிறிய ஊழியத்திற்கும் பலிக்கும் அதிகமாகவே வெகுமதி அடைந்துவிட்டதாக உணர்ந்து, அவர்கள் சந்தோஷப்பட்டு, களிகூறுவார்கள். இராஜ்ய வகுப்பாரின் பரிசைக் குறித்த ஏனைய வேதவசனங்களின் போதனைகளுக்கிணங்க, இந்த உவமையை நாம் எவ்வாறு சீரான வகையில் பொருந்தச்செய்யலாம் ? ஒரேயொரு வழி

மாத்திரம் நம்மால் சிந்திக்க முடிகின்றது. அதாவது, இந்த உவமையை இராஜ்ய வகுப்பாரின் தற்போதைய ஜீவிய அனுபவங்களுக்கு, குறிப்பாக இந்தச் சுவிசேஷயுகத்தின் முடிவில் வாழ்ந்து வருபவர்களுக்கு முற்றிலுமாகப் பொருத்திப் பார்ப்பதேயாகும்.

### ஓரளவு யூதர்களுக்குப் பொருந்தக் கூடியவை

பதினாறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக யூதர்கள், மேசியாவின் முதலாம் வருகைக்காகவும், பின்னர் வரவிருக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்புகளுக்காகவும் காத்திருந்தனர். இயேசுவானவர் தம்முடைய ஊழியத்தைத் துவங்கினபோது, "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்து, அதில் நுழைவதற்கான சிலாக்கியத்தை யூதர்களுக்கே வழங்கினார். அந்தச் சிலாக்கியமே ஒரு "பணம்" அல்லது அவர்களின் வாழ்நாள் முழுவதும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கான அவர்களின் உண்மையுள்ள முயற்சிக்குக் கிடைத்த ஒரு பரிசாகும். ஆனால் இராஜ்யத்தின் சலுகையானது பலர் அறிய பிரகடனப்படுத்தப்பட்டபோது, முன்பு தேவனுடைய ஊழியத்தையும் திராட்சத் தோட்டத்திலுள்ள வேலையையும் புறக்கணித்த சிலராகிய, ஆயக்காரர்களும் பாவிகளுமே ஈர்க்கப்பட்டனர். இந்தப் புதிய வேலையாட்கள், கர்த்தராகிய இயேசுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய சீஷர்களாக ஆவதற்கு ஒரு வாய்ப்பும் வழங்கப்பட்டது.

சீஷத்துவத்தின் சிலாக்கியமே அந்தப் பணம் அல்லது பரிசாகும். தங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தராகிய தேவனுக்கு உண்மையாயிருந்த வேதபாரகரும், பரிசேயரும், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளுக்கு மேலாகத் தங்களுக்கே மேலான உயர்வோ அல்லது முன்னுரிமையோ கொடுக்கப்படவேண்டும் என்று கருதினார்கள். தங்களுக்கு இராஜ்யத்தின் முதல் ஸ்தான வாய்ப்புகளை வழங்காத எந்தவொரு ஏற்பாடானாலும் அது நியாயமற்றதென்று முறுமுறுத்தனர். ஆயக்காரர்களும் பாவிகளும் மேசியாவோடு சீஷராகப் பாக்கியமான சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள் என்றால், நிச்சயமாக, இன்னும் சில உயர்ந்த தயவுகள் தங்களுக்கும் வரவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். இயேசு ஆயக்காரரையும் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் சாப்பிட்டதற்காக அவர்கள் முறுமுறுத்தனர்.

இதற்கொத்த வண்ணமாகவே எஜமானரின் உவமைகளில் ஒன்று, பரிசேயர்களுக்கு ஒரு விசேஷித்த கண்டனமாகக் கூறப்பட்டது. கெட்டகுமாரன் என்பவர் தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்கு ஏற்ப ஜீவிக்காத யூதர்களின் ஒரு வகுப்பாரைக் குறிக்கின்றார். அதேசமயம், மூத்த சகோதரர் என்பவர் பிதாவிற்கடுத்த காரியத்தில் தொடர்ந்து ஆர்வத்துடனும், தீவிரமாகவும் ஈடுபட முயன்றவர்களைக் குறிக்கின்றார். இந்த கெட்ட குமாரன் வகுப்பாரில் சிலர், இயேசுவின் மற்றும் அவருடைய சீஷர்களின் உதடுகளிலிருந்து கிடைத்த தேவ அன்பின் செய்தியை ஏற்றுக்கொண்டு, பிதாவின் வீட்டிற்குத் திரும்பி இரக்கத்துடன் நடத்தப்பட்டு, வழிதவறிப் போகாதவர்களுக்கு கொடுக்கப்பட்ட புத்திரசுவீகாரத்துவம் என்னும் அதே சிலாக்கியம் வழங்கப்பட்டபோது, உண்மையாக வேலைசெய்த மூத்த சகோதரர் வகுப்பாரோ மனம் நொந்தனர். அவர்கள் முறுமுறுத்து, விருந்தில் பங்கேற்க மறுத்துவிட்டனர். இவ்வாறாக, வாய்ப்பில் முதலிடம் பெற்றுக்கொண்டு, ஆசீர்வாதத்தைப் பொறுத்தவரையில் கடைசியாக இருந்த சிலரும், கடைசி மற்றும் பிந்தினோராய்த் தெய்வீக ஆசீர்வாதத்தை விரைவாகவும், அதிக பயனுள்ளதாகவும் பெறுவதற்கான வாய்ப்பைக் கண்டெடுத்த மற்றவர்களும் இருந்தார்கள்.

### கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தக்கூடியவை

இவ்வுவமையின் பொதுவான பாடம் யாதெனில், தேவன் எது வழங்கினாலும் அது ஓர் ஈவுதான் என்கிற உண்மையை நாம் மதித்துணர வேண்டும் என்பதாகத் தெரிகிறது. கொள்கைக்கும், நீதிக்குமான அன்பின் உண்மைத்தன்மையுடன் அவருடைய ஊழியத்தில் நாம் நுழையவேண்டும். நாம் பல ஆண்டுகள் ஊழியம் புரிந்திருந்தால், அந்த ஊழியத்தின் சிலாக்கியமானது அதிகமாக மதிக்கப்படவேண்டும். மேலும் கர்த்தருடைய காரியத்தில் நம்முடைய ஈடுபாடானது நம்மை மகிழ்விக்கவேண்டும். ஊழியத்தின் சிலாக்கியத்தை மதித்துணரும் அத்தகைய நிலைப்பாட்டிலிருந்து, கர்த்தருடைய வேலைகளானது மேற்கொள்ளப்படுவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். மற்றவர்கள் ஊழியத்தில் நுழைவதைக் கண்டும் மகிழ்ச்சிகொள்ளவேண்டும். நாம் நமக்கு கிடைக்குமென்று நம்பிக் கொண்டிருக்கின்ற அதே பரிசை அவர்கள் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சியடையவேண்டும். திராட்சத் தோட்டத்தின் சிலாக்கியங்களை மதித்துணரும் இத்தகைய பரந்த மனப்பான்மையின் ஆவி உள்ளவர்கள் மாத்திரமே, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் .. யாவரிடத்திலும்" அத்தகைய அனுதாபம் காண்பிப்போர் மாத்திரமே, இராஜ்யத்திற்கு முறையான தகுதியானவர்களாய் இருப்பார்கள் மற்றும் இராஜ்யம் ஆயத்தமாக்கப்பட்டிருப்பதை அறிவிக்கும்போது, அறிவு மற்றும் வாய்ப்பின் விசேஷித்த சிலாக்கியங்களைப் பெறுவதற்கு தயார் நிலையிலிருப்பார்கள்.

இயேசுவினுடைய நாட்களில், யூதர்களுக்கு நிழலான இராஜ்யம் வழங்கப்பட்டதைப் போலவும், தெய்வீக ஊழியத்தில் புதியவர்களாக இருந்தும், நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தவர்களுடன் இராஜ்யத்தில் பங்கு பெறுவதற்கான அதே வாய்ப்புகளைப் பெற்றதைப் போலவும், முடிவிலும், அல்லது இந்த சுவிசேஷ யுகத்தின் அறுவடைக்

காலத்திலும் அவ்வண்ணமாகவே இருக்கும். தங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்–களாயிருக்க தேடுவோராயும், அவர் நிமித்தமாக ஊழியஞ்செய்யவும் முயன்று வருபவர்கள், தாங்கள் இவ்வளவு அதீத சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சிலர் பின்னர் தெய்வீக ஊழியத்தில் நுழைந்தாலும்கூட அவர்கள் சக ஊழியர்களாக, அவர்களுடன் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மெய்யாகவே, கர்த்தருடைய வார்த்தையின்படி ஊழியக்காரர்களாகிய அனைவரும், வரக்கூடிய மற்றவர்கள்மேல் பொறாமைப்படுவதற்குப் பதிலாக, திராட்சத் தோட்டத்திற்கு மற்ற வேலையாட்களை அனுப்பும்படி எஜமானரிடம் வேண்டிக்கொள்ளவேண்டும். இப்போது கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்யும் அனைவருக்கும் பரிசாக, தற்கால சத்தியத்தைப்பற்றிய அறிவு கிடைப்பதால், இப்பரிசானது சமீபத்தில் வந்தவர்களுக்கும், எஜமானரின் ஊழியத்தில் நீண்ட காலமாக இருந்தவர்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படுமானால், நாம் ஆச்சரியப்படலாகாது.

மாறாக, கர்த்தருடைய வழிகளில் நாம் மனமகிழ்ச்சியடைவோமாக. அவர் காட்டிய கிருபையால் பதினோராம் மணிவேளையிலும்கூட வேலைக்கு வந்தவர்கள்மீது நம்முடைய இருதயங்கள் கோபப்படவேண்டாம். அவர்களும் சகோதரர்கள் (சகோதரிகள்) அல்லவா! பொன்னான பிரமாணத்தின் விதிமுறைகளின் கீழ் நாம் அனுபவிக்கும் அதே ஆசீர்வாதங்களை அவர்களும் பெற்றுக்கொள்ள விரும்ப வேண்டுமல்லவா! கர்த்தருடைய ஊழியத்தில் நீண்ட காலமாக இருந்தவர்கள் ஒதுங்கியிருக்கும்போது, இப்போது அவர்கள் கர்த்தருடைய தயவை இன்னும் அதிகமாக வெளிப்படுத்தவேண்டும் என்ற அவர்களைக் குறித்த எந்தவொரு உணர்வும் இல்லாதிருப்பது, ஐயத்துக்கிடமில்லாமல் தவறானதாகும். கர்த்தர் தம்மைப் போல அதே சாயலில் நாமும் இருக்க விரும்புவார். இதுவே இந்தப் பாடத்திற்கான ஆதார வசனத்தைத் தெரிவுசெய்தவர்களின் பரிந்துரையாகவும் இருக்கிறது. நீங்களும் உங்கள் பிதாவைப் போல இருங்கள்; "அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே"(லூக்கா 6:35). "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்" – மத்5:45.

## திறவுகோல் வசனம் தரும் பாடங்கள்

இருண்ட யுகங்களில் நம்முடைய மூதாதையர்கள் தேவனுடைய குணலட்சணம் மற்றும் மனித இரட்சிப்புக்கான அவரது திட்டத்தின் சரியான கருத்தை இழந்ததை மகா பெரிய மற்றும் முக்கியமான அர்த்தத்திலும் நாம் மென்மேலும் கற்று வருகின்றோம். விசுவாசப்பிரமாணங்களில் அவரை அன்பாகவும் இரக்கத்தோடும் சித்தரிப்பதற்குப் பதிலாக, அவர்கள் அவரை மிகவும் வித்தியாசமான வர்ணங்களில் சித்தரித்தனர். நம்மிடம் மரபுவழியாகக் கொடுக்கப்பட்டுள்ள இருண்ட யுகங்களின் விசுவாசப் பிரமாணங்களானது, வேதாகமத்தினுடைய போதனைகளின்மீது வர்ணம் பூசப்பட்ட மற்றும் சிதைந்த கருத்துக்களாகவே வந்துள்ளன. சமீப காலங்களில் மாத்திரமே வேத மாணவர்கள் இந்த உண்மையை உணரத் துவங்கியிருக்கிறார்கள். விசுவாசப்பிரமாணங்களுடைய போதனைகள், ஆரம்பத்திலிருந்தே தேவன் கோடிக்கணக்கான எண்ணிக்கையுடைய தம்முடைய மனித ஜீவன்களனைத்திற்கும் ஓர் எரிநரகத்தையும், நித்திய சித்திரவதையையும், மற்றும் தெரிந்துகொள்ளப்பட்ட சிலராகிய பரிசுத்தவான்களுக்கு மாத்திரம், பரிபூரண ஆனந்தமாகிய பரலோகத்தையும் திட்டம் பண்ணியிருக்கிறார் என்பதே அவர்களுடைய போதனையின் பொதுவான போக்காக இருப்பதையும். அது பகுத்தறிவற்றது என்றும் எண்ணி, இப்போதுள்ள அனைத்து அறிவுத்திறம் வாய்ந்த ஜனங்களும் தூக்கி எறிந்துள்ளனர்.

ஆனால் அந்தோ, நம்முடைய விசுவாசப் பிரமாணங்களின் தப்பறைகளை நாம் உணர்ந்திருந்து, அவற்றை கைவிட்டு வரும் அதே வேளையில், வேதாகமத்தின் போதனைகளிலிருந்து அவர்களின் போதனைகள் எவ்வளவு வேறுபட்டிருக்கிறது என்பதை நம்மில் பலர் கவனிக்கத் தவறித்தான் போயுள்ளோம். ஆனாலும் வேதாகமம் பின்னர் மீண்டுமாக நாடிச்செல்லப்படுகிறது. நமது பார்வையைச் சிதைத்த வர்ணம் பூசப்பட்ட விசுவாசப்பிரமாணங்களின் கண்கண்ணாடிகள், துண்டுகளாக உடைக்கப்படுகின்றன. வேதாகமத்தை அதன் தெளிவான வெளிச்சத்தில் படிக்க நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் கற்ற அளவுக்கு ஆசீர்வாதத்தையும் அடைந்திருக்கிறோம்.

உதாரணமாக, இந்த வசனத்தைக் கவனியுங்கள்: "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்". இருண்ட யுகங்களில் சகோதரர் கால்வின், இரத்தம் தோய்ந்த மரியாள்( Bloody Mary),மற்றும்ஆயிரக்கணக்கானோர், மதத்தின் பெயரிலும், இயேசுவின் நாமத்திலும், பிதாவின் நாமத்திலும், தாங்கள் தேவனைப் பிரதியெடுப்பதாக நினைத்து, பரலோகத்திலுள்ள தங்கள் பிதாவைப் போல இருப்பதாக நினைத்து, கொடூரமான கொடுமைகளைச் செய்தனர். ஆனால் அந்தோ, அவர்கள் அவரைச் சரியாக அறிந்திருக்கவில்லை! சர்வ வல்லமையுள்ள, கிருபையுள்ள தேவனை, இரக்கங்களின் பிதாவை, மனித

ஜீவன்களுக்கான அவருடைய திட்டங்கள் மற்றும்அவருடைய ஏற்பாடுகளில் மிகவும் பேய்த்தனமாக இருப்பதைப் போன்று குறிக்கப்படும் பேயுருவமுள்ள படங்களை அவர்கள் பின்பற்றி வந்தனர். “ நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்” என்று இயேசு கூறினபோது, உண்மையில் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை இப்போது நாம் காண்கின்றோம். அவருடைய வசனத்தின் எஞ்சிய பகுதியையும் இப்போது நாம் சேர்த்துக் கொள்கிறோம், “அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே(லூக்கா 6:35). மற்றும், “அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்(மத்தேயு5:45).

இயேசுவின் சீஷர்களில் மிகவும் மேன்மக்களாயிருந்தவர்களில் இருவர், எஜமானருடன் சற்றுநேரம் தனிப்பட்டமுறையில் இருந்தபோதிலும், தவறாகவே கருத்தினைப் புரிந்துகொண்டார்கள். ஆற்றல்மிக்க விசுவாசப்பிரமாணத்தை உருவாக்கும் நீண்டகாலத்தின்போது, மற்றும் வேதாகம தியானத்தைப் புறக்கணிக்கும் நீண்ட காலத்தின்போது, தெய்வீகக் குணலட்சணம் பற்றிய அனைத்து சரியான கருத்துக்களையும் இழந்தவர்களை நாம் எவ்வளவாக மன்னித்து இரக்கங் காட்டவேண்டும்!

குறிப்பிடப்பட்ட இரண்டு சீஷர்கள், செபதேயுவின் மகன்களான யாக்கோபும், அவரது சகோதரன் யோவானுமே ஆவார்கள். கர்த்தருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் புசிப்பதற்கு உணவில்லாதபோது, யாக்கோபும் யோவானும் அப்பம் வாங்கச் சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள். யூதர்களைப் போலவே சமாரிய வியாதியஸ்தர்களையும் குணப்படுத்த, இயேசு ஏன் தங்கள் கிராமத்திற்கு வரவில்லை என்று சமாரியர்கள் விசாரித்தனர். அக்காலத்திற்கான அவருடைய பணியானது யூதர்களுக்காக மாத்திரமே இருந்தது என்பதை அவர்கள் அறிந்தபோது அவர்கள் கோபப்பட்டு, “உங்கள் அப்பத்தை யூதர்களிடமிருந்தே வாங்கிக் கொள்ளுங்கள்; நாங்கள் உங்களுக்கு எதுவும் விற்கமாட்டோம்” என்றார்கள். எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியாயுள்ள தங்கள் எஜமானர், இவ்வாறு அவமதிக்கப்பட்டார் என்று கோபமடைந்த யாக்கோபும் யோவானும், சமாரியர்களை அழிக்கும்படி வானத்திலிருந்து அக்கினியை வருவிக்க இயேசுவிடம் கேட்டார்கள். இந்த சீஷர்கள் தங்களிடம் தேவனுடைய ஆவி இருப்பதாக நினைத்தார்கள். ஆனால் இயேசுவோ, நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்; மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்” என்று கூறினார்–லூக்9:55.

இந்த இரண்டு அன்பான சீஷர்களையும் திருத்தப்பட வேண்டிய அவசியமிருக்கும்போது, சமாரியர்களை அழிக்க விரும்புவதில் அவர்கள் தவறான ஆவியுள்ளவர்களென்பதைக் காட்ட வேண்டிய அவசியம் இருக்கும்போது, தேவனுடைய நாமத்தால் எல்லா எதிராளிகளையும் நித்தியத்திற்குமான சித்திரவதைக்கு ஒப்படைப்பவர்களுக்கு இயேசுவின் கண்டிப்பு இன்னும் எவ்வளவு அதிகமாக பொருத்தமாக இருக்கும்!

ஆனால் நம்மில் சிலரும், தவறான கோட்பாட்டின் மதுவைக் குடித்ததன் விளைவாக, நம்முடைய அறியாமையில், நம்முடைய மூடநம்பிக்கையில், நமது விசுவாசப்பிரமாண போதையில் இருந்தோம். (வெளிப்படுத்தல் 17:1–5; 18:3). விடுவித்ததற்காக தேவனானவருக்கு ஸ்தோத்திரம்! அவருடைய ஜனங்களுக்கு வந்துகொண்டிருக்கும் தெளிவான பார்வைகளுக்காக அவருடைய நாமத்தைத் துதிப்போமாக! ஒரு புதிய யுகத்தினுடைய காலையின் விடியலானது அறிவுப்பிரகாசத்தைத் தந்து வருகின்றது. நீதியின் சூரியன் உதயமாகி வருகின்றது; கடந்த காலத்தின் பிசாசுகள் அதன் ஒளிரும் கதிர்களுக்கு முன்பாக தப்பி ஓடுகின்றன. “இந்த ஆசீர்வாதமான நற்செய்திகளை முழு உலகிற்கும் அறிவியுங்கள்”.

## நம்முடைய தேவனின் மகிமை நிறைந்த குணலட்சணம்

இப்போது நம்முடைய திறவுகோல் வசனத்தை தியானிக்கும்போது, நம்முடைய தேவன், நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும், பாவிகளுக்கும்கூட கிருபையுள்ளவராகவும், அன்பானவராகவும், இரக்கமுள்ளவராகவும், தயவுள்ளவராகவும் இருப்பதுபோல, நாமும் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவரிடத்திலும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாரிடத்திலும் தயவாயும், பெருந்தன்மையாயும், அன்பாயும் இருத்தல் வேண்டும். தேவனைப் பற்றிய இந்தப் பார்வையானது நம்முடைய இருதயங்களை ஈர்க்கின்றது. மேலும் இந்த அன்பின் தேவனை நாம் எவ்வளவுக்கதிகமாகத் தியானிக்கின்றோமோ, அவ்வளவுக்கதிகமாக, அவர் ஒருவரே அன்பான மற்றும் உண்மையான தேவன் என்பதையும், நம்முடைய முந்தைய தவறான எண்ணங்களனைத்தும் (நாம் சொந்தமாக உருவாக்கின தேவர்கள்) உண்மையற்றவை, அன்பற்றவை, பொய்யானவை என்பதையும் உணர்ந்திருக்கிறோம்., அவ்வளவுக்கதிகமாக, புறஜாதிகளால் செய்யப்பட்ட இரும்பு, கல், பித்தளை அல்லது களிமண்ணாலான எந்த

விக்கிரகங்களைக் காட்டிலும், நாகரீகமடைந்த தேசங்கள் பேனா, தட்டச்சு, மை மற்றும் காகிதம் ஆகியவற்றால் செய்த விசுவாசப்பிரமாண விக்கிரகங்கள் மிகவும் பயங்கரமானவை என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம்.

"ஒரு மனிதனின் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்"(நீதிமொழிகள் 23:7). அவன் வணங்கும் தெய்வம் கொடூரமான, பழிவாங்குகின்ற, வெறுக்கத்தக்க, பேய்த்தனமாக இருக்குமென்று அவனது இருதய எண்ணத்தின் உயர்மாதிரி இருந்தால், அத்தகைய பொய்யான தெய்வத்தை வணங்கும் அந்த ஆணோ பெண்ணோ ஏறக்குறைய மாசுபடாமல் தவறான சிந்தனை மற்றும் தவறான செயல்களுக்கு ஏறக்குறைய வழிநடத்தப்படாமலிருந்தால் அது ஓர் அதிசயமேயாகும். மாறாக அன்பான மெய்த்தேவனை நம்முடைய எண்ணத்தின் உயர்மாதிரியாக மனக்கண் முன்னே வைக்கும்போது, நம்முடைய சிருஷ்டிகரின் கிருபையான நற்குணங்களை நாம் புரிந்துகொள்வதால் நாளுக்கு நாள் மென்மேலும் மாற்றப்பட்டு, மறுரூபமடைவோம். அறியாமலேயே நாம் இந்த உன்னத எண்ணத்தின் உயர்மாதிரியை பிரதியெடுத்து, நம்முடைய மனதைப் புதுப்பிப்பதன் மூலம், மென்மேலும் மறுரூபமடைவோம், மற்றும் நம்முடைய அன்றாட ஜீவியத்தில் தேவனுடைய நன்மையானதும், பிரியமானதும், பரிபூரணமானதுமான சித்தத்தை மென்மேலும் மெய்ப்பிப்போம்.

தேவனுடைய உறுதியான வார்த்தையை, நன்மையளிக்கும் வார்த்தையை பற்றிக் கொண்டிருப்போமாக. தெய்வீகச் செய்தியை நமக்கு பெரிதும் தவறாகச் சித்தரித்த இருண்ட யுகங்களின் மனிதக் கோட்பாடுகளை நிராகரிப்போமாக. இவ்வாறாக, "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்கிற எஜமானரின் வார்த்தைகளுக்கு நாம் செவிசாய்க்கிறவர்களாய் இருப்போம்.

"அவ்வார்த்தையை நம்புவோர்க்கு வாழ்வின் இனிதான நம்பிக்கையுண்டே,

குழப்பம் தப்பறை சச்சரவு முடிவுக்கு வருகிறதே,

தாழ்மையுடன் அதன் நீதியான கட்டுப்பாட்டுக்கு அடிபணிந்தே,

சத்தியந்தேடும் ஆத்துமாவிற்கு அதன் கிருபைதனை அது அளிக்கிறதே"

---------

**R 5466**

# ஆர்வத்தைத் தூண்டும் கேள்வி

## AN INTERESTING QUESTION

**கேள்வி : தானியேல் 4:17 மற்றும் ரோமர் 13:1,2 வசனங்களிலிருந்து, தேவன் தேசங்களின் நடவடிக்கைகளில் வழிகாட்டுகிறார், அவர்களது ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கிறார் என்று நாம் புரிந்துகொள்ளலாமா ?**

**பதில் :** "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்" – தானியேல் 4:17

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்" – ரோமர் 13:1,2.

மேற்கண்ட வசனங்கள், மற்ற வேத வசனங்களின் அறிக்கைகளோடு இணக்கமாயுள்ளன. உதாரணமாக, நேபுகாத்நேச்சாரின் விஷயத்தில், அவர் 7 வருடங்கள் பித்துப்பிடித்த நிலையில், வெளியின் மிருகங்களோடு சஞ்சரித்தபிறகு, அவருடைய புத்தி அவருக்குத் திரும்பினது. பரலோகத்தின் தேவனை அவர் புகழ்ந்து, ஸ்தோத்தரித்து, அவர் தமக்கு சித்தமானவரை உயர்த்துகிறார், தம் தீர்மானத்தின்படி, யாரை தாழ்த்த சித்தம் கொள்கிறாரோ, அவ்வாறே செய்கிறார் என்றான். தேவனுடைய செயல்தொடர்பு நேபுகாத்நேச்சார் ராஜாவுடன் தீர்க்கதரிசனப்படி இருந்தது என நாம் புரிந்துகொள்கிறோம்.

இஸ்ரயேலரின் விஷயத்தில், அவர்களுடைய நடவடிக்கைகள்மேல் , அவரது மேற்பார்வை மிக குறிப்பிடும்படியாக இருந்தது. தாவீது சிறுவனாக இருக்கும்போதே அபிஷேகம் பண்ணப்பட்டு, சவுலுக்கு பதிலாக ஏற்றவேளையில் ராஜாவானார். அவ்வாறே அவர்களுடைய பல ராஜாக்களிடத்திலும் நிகழ்ந்தது. கர்த்தர் முன்கூட்டியே அவர்களை அபிஷேகம் பண்ணினார். சிங்காசனத்தின்மீது யார் உட்கார்ந்தாலும், அவர் கர்த்தருடைய பிரதிநிதியாகவே இருந்தார் என இஸ்ரயேலைக் குறித்து சொல்லப்பட்டது. ஒரு தருணத்தில், தேவனுடைய தீர்க்கதரிசி , சிரியா ராஜாக்களிடத்திற்கு அனுப்பப்பட்டு, அவரைக்குறித்த தீர்க்கதரிசனத்தை எடுத்துரைத்து, அவர் சிங்காசனத்தின்மீது

அமரவேண்டுமென சொல்லி அபிஷேகம் செய்ததை நாம் நினைவுகூர்கிறோம்.

பாரவோனுடைய விஷயத்தைப் பின்னோக்கிப் பார்க்கையில், மூர்க்கமான இந்த எகிப்திய ராஜாவைக் குறித்து தேவன் அறிவித்தார்; என் வல்லமையை உன்னிடத்தில் நான் விளங்கப் பண்ணும் இந்த நோக்கத்திற்காகவே நான் உன்னை எழுப்பினேன்''. தேவன் பார்வோனை அங்கீகரிக்காதபோதிலும், தம் சொந்த மகிமை விளங்கும்படி அவரை பயன்படுத்தினார். மேலும் தேவன் பெர்சிய ராஜாவாகிய கோரேஸையும் தம் ஆணையை நிறைவேற்றும் தம் ஊழியனாக உபயோகித்தார்.

### தற்கால நிகழ்வுகளை தேவன் கண்காணிக்கிறார்

இந்த பதிவு செய்யப்பட்டசம்பவங்களனைத்தும், தம் சொந்த திட்டத்திற்கு பாதிப்பேற்படுத்தும்படி அல்லது தாமதப்படுத்தும்படி, யார் முன் வருவர் என்ற முக்கியமான ஆர்வத்தை தேவன்பேரில் ஏற்படுத்துகிறதைக் காண்பிக்கிறது. இந்த வித்தியாசமான ராஜாக்கள், தேவனுக்கு உண்மைத்தன்மையோடிருந்து, அவரால் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தவர்களை அடையாளப்படுத்துகிறார்கள் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, இவர்கள் மூலமாக தெய்வீகத் திட்டம் செயல்பட்டது, ஒரு சமிக்சையாக வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே இன்றைக்கும் நிகழ்கிறது. கிபி **1912**ன் முடிவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஜனாதிபதியாக போட்டியிடுவோரில் ஆளுகைக்கு வர மிக தகுதியான நபர் யார் என்று கர்த்தர் அறிவார். அந்நேரத்தில் கடந்தோட தாம் அனுமதிக்கப்படும் நிலைமைகளோடு இணக்கமாக செயல்பட யார் தகுதியானவர் என்று அவர் அறிவார்.

கர்த்தர் தற்போது தேசங்களின் நடவடிக்கைகளில் வழிகாட்டுகிறார். தம் சொந்த தீர்மானங்களை நிறைவேற்ற ஊக்குவிக்க மட்டுமே இப்படிப்பட்ட மேற்பார்வையிடுகிறார். பல்வேறு நாடுகளின் மன்னர்கள் (Monarchs), தங்களை ''தேவகிருபையினால் உண்டான ராஜா'' என்று அறிவிக்கும் தங்கள் சொந்தக் கருத்தை, நாம் ஏற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த கருத்தையே, அதாவது அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக, அவரது விசேஷ தயவின்மூலம் ஆளுகை செய்வதாக தங்களை வெளிப்படுத்தி வந்தனர் என்ற கருத்தையே இவைகள் வெளிப்படுத்துகின்றன. அதுபோலவே, கத்தோலிக்க சபையும், கிறிஸ்தவ சபையின் தலையாக போப்பு இருப்பதாயும், அவரே கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் இருப்பதாயும் உரிமை பாராட்டினது. கிறிஸ்து தம் ராஜ்யத்தை ஸ்தாபித்திருப்பதாகவும், அவருக்கு பதிலாக தான் ஆளுகை செய்வதாகவும் போப்பு உரிமை பாராட்டினார்.

### தேவதிட்டம் செயல்படுத்தப்பட மேலாட்சி செய்தல்

ஐரோப்பாவில் போப்புவின் அதிகாரம் குறைந்தபிறகு, புராட்டஸ்டன்ட்டுகள் அதிகாரத்துக்கு வந்தனர். கத்தோலிக்கர்கள் உரிமை பாராட்டினபடியே, புராட்டஸ்டன்ட்டுகளும் உரிமை பாராட்டி, கர்த்தருடைய விசேஷ பிரதிநிதிகளாக அதிகாரம் செலுத்தினர். இந்த நிலைப்பாட்டின்படியே, ராஜாக்கள் தேவகிருபையினால் ஆளுகை செய்வதாக தங்களை நிலைநிறுத்தி வந்தனர். தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும், அதன்படி, தாங்கள் தேவனுடைய ராஜ்யங்களை ஆளுவதாகவும் கூறிக்கொண்டனர். இது சரியான கருத்தாக நாங்கள் புரிந்துகொள்ளவில்லை, மாறாக, தற்காலத்துக்கு உலக சிம்மாசனங்களை ஆக்கிரமிப்பதற்கு தேவனுடைய ஏற்பாடு அனுமதித்திருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில், தேவன் மேற்பார்வையாளராயிருந்து கண்காணிக்கிறார் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம். அவருக்குப் பிரதிநிதிகளாக இருக்க அவர் அவர்களுக்கு அதிகாரமளிக்கவில்லை, அல்லது, அவர்களுடைய செயல்களுக்கும் அவர் பொறுப்பாளியல்ல. மாறாக அவர் காரியங்களை கட்டுப்படுத்தி, தம் சொந்த ஏற்பாடுகளை அவர்கள் செயல்படுத்தும்படி செய்கிறார்.

இதைச் செய்வதற்காக, தேவன் ஒரு ராஜாவை மனம்மாற்றுவதில்லை,அவரை பரிசுத்தவானாக்குவ–தில்லை. அதற்கு மாறாக, எந்த தனிப்பட்ட மனிதனுடைய சுயாதீனத்திலும் குறுக்கிடாமல், அவரால் நிகழ்வுகளை அனுமதிக்கவோ அல்லது தடுக்கவோ முடியும். தனி மனித அரசாங்கத்துக்கு தாம் பொறுப்பாளியாகாமலும் இருக்கமுடியும்.

இந்த தெய்வீக வல்லமையின் மேற்பார்வை, மனுக்குலத்தின் இறுதி நன்மைக்கென்றே இருக்கிறது என்று நாம் உறுதியளிக்கிறோம். இருளின் அதிபதி ஒருவன் இருக்கிறான், அவன் மனுக்குலத்திற்கு தீங்கு செய்யத் தேடுகிறான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தெய்வீக வல்லமை தடைசெய்கிறது அல்லது கட்டுப்படுத்தப்படுகிறது என்பதே நம் கருத்தாயிருக்கிறது. அதனால் ஏற்றவேளை வரும்வரை, மிக மோசமான காரியங்கள் கடந்துவராது. அவருடைய ஏற்றவேளை வந்திருக்கும்போது, அவர் எதை அனுமதிக்க தீர்மானிக்கிறாரோ, அதற்குரிய குணஇயல்பை பெற்றிருப்போரால் அவை நிறைவேறும்படி தேவன் மேலதிகாரம் செலுத்துவார். ஆயினும், இதை எவ்வாறு செய்கிறார் என்று கர்த்தர் நமக்கு விவரிக்க–வில்லையாதலால், நம் வார்த்தைகளை அதிக வலுவாக முன்வைப்பது ஞானமில்லாத செயலாக நமக்கு இருக்கும்.

–––––––––

**R 5475**

# தெய்வீக முரண்பாடுகள்

## (தெய்வீக முரண்பாடுகள் போல் தோன்றும் மெய்யுரைகள்)

## DIVINE PARADOXES

**"ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை(தயவு) நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும் " – சங்கீதம் 63:3**

இவ்வசனத்தை இரண்டு வழிமுறைகளில் கண்ணோக்கலாம். இரண்டுமே மிகச் சரியானவைகளே. ஒரு வகைமுறை யாதெனில், வெறுமனே சங்கீதக்காரரின் கண்ணோட்டத்திலிருந்தும், அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பதையும் கவனமாகக் கருத்தில் கொள்வதாகும். மற்றொரு வகைமுறை, தீர்க்கதரிசனத்தின் நிலைப்பாட்டிலிருந்து அதைக் கவனமாகக் கருத்தில் கொள்வதாகும். தீர்க்கதரிசியான தாவீது, ஜீவனைப்பார்க்கிலும் தேவதயவைப் பெற்றிருப்பது மிகவும் விரும்பத்தக்கது, அதாவது தேவதயவில்லாமல் தான் ஜீவிப்பதைக் காட்டிலும், தான் மரிப்பது நலமென்கிறார் என்று பொருள்படுத்துவதை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது. அதைத் தீர்க்கதரிசனமாகப் பார்க்கும் மற்ற வகைமுறை யாதெனில், ஏனைய பல இடங்களைப் போலவே, இங்கேயும் சங்கீதக்காரர் , தலையாகிய இயேசுவுக்கும், திருச்சபையாகிய அவரது அங்கத்தினர்களுக்கும் அடையாளமாக இருக்கிறார் என்று அனுமானிப்பதாகும்.

நமது அர்ப்பணிப்பின் பிரதிஷ்டை, மரண பரியந்தமானது. நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அவர் நம்மை அழைத்திருக்கிறார். மேலும் வரவிருக்கின்ற ஜீவனுக்காக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும் அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருக்காகவும், அவர் நிலைநிற்கும் நீதியின் கொள்கைகளுக்காகவும் நாம் கொண்டிருக்கும் அன்பின் நிமித்தமாக, நாம் வெறுமனே நம்முடைய ஜீவனைக் கொடுக்க மனதாயிருந்தால் மாத்திரம் போதாது, அவற்றை மகிழ்ச்சியோடு கொடுக்கிறவர்களாயும் இருக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்வதில் நம்முடைய மனித ஜீவியங்களை மகிழ்ச்சியோடு கையளிக்கவேண்டும்.

தாவீதின் சங்கீதங்களில் வேறொரு சங்கீதம், "தேவனுடைய தயவோ நீடிய வாழ்வு" என்கிற கருத்தை நமக்குத்தருகின்றது(சங்30:5). இந்த முரண் வாக்கியங்களானது, "தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" என்னும் மற்றுமொரு தெய்வீக முரண் வாக்கியத்துடன் இசைந்துவருகின்றன. யாதொருவர் தனது பூமிக்குரிய ஜீவனைச் சரணடையச் செய்கிறாரோ, அவர் கனம் மகிமை அழியாமை மற்றும் திவ்ய சுபாவம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வார். திருச்சபைக்கு வழங்கப்பட்ட தெய்வீக தயவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த மகிமையான விஷயங்களை நாம் மதித்துணருவதில் மகிழ்ச்சியடைகிறோம். மற்றும், நாம் மகிழ்ச்சியுடன் நமது ஜீவன்களைத் தத்தம் செய்கிறோம். சிறந்த பங்கினையே நாம் தெரிந்துகொண்டோம்.

"ஆகையால் என் உதடுகள் உம்மைத் துதிக்கும்" "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" என்று வேத வாக்கியங்கள் தெரிவிக்கின்றன(ரோமர் 10:10). நீதியாக ஜீவிப்பது தான் கர்த்தருக்கான நம் கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று என்று நாம் கூறலாம். ஆயினும் கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிக்க சிலர் கடுமையாக முயற்சி செய்தாலும், அவரை அறிக்கை பண்ணுவதில் கட்டுப்படுத்தப்பட்டோராய் இருக்கக்கூடும். அறிக்கை பண்ணுவதால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களுக்குக் காரணங்கள் இருக்கின்றன. ஒரு காரணம் என்னவென்றால், அந்தகாரத்தினின்று நம்மை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, அது உலகிற்கு ஒரு சாட்சியாக இருக்கின்றது. இரண்டாவது காரணம், இந்தச் சாட்சியமானது நம்மீது நல்லதொரு தாக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதாகும். இந்த சாட்சியை ஆதரிக்க நமது சுபாவத்தின் சக்திகளை நாம் உதவியாகப் பெறுகின்றோம். இதனால் நமது சுபாவத்தின் அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கின்றோம்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதென்பது எதிர்ப்பினையே கொண்டுவரும். நம்முடைய கர்த்தர், பிசாசுகளைத் துரத்துவது, வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது போன்றவற்றை மாத்திரம் செய்துவிட்டு, தெய்வீகத் திட்டத்தைப் பற்றி எதுவும் பேசாமலிருந்திருந்தால், அவர் ஒரு நேர்த்தியான குணாதிசயம் உடையவராக, நன்மை செய்கின்ற ஒரு மனிதனாக மாத்திரம் பார்க்கப்பட்டிருப்பார். ஆனால் அவர் வேதபாரகர் பரிசேயர்கள் போலல்லாமல், வித்தியாசமாகப் பிரசங்கித்ததாலும், அவரது சத்தியப் பிரசங்கம் அவரைச் சுற்றியிருந்தவர்களின் போதனைகளுக்கும் மிஞ்சினதாய் இருந்ததாலும், அது அவர்களின் கோபத்தைத் தூண்டச் செய்தது.

இன்றைக்கும்கூட அவ்வாறே உள்ளது. எல்லா உபத்திரவங்களும் சத்தியத்தை அறியப்படச் செய்வதினாலேயே வருகின்றன. எங்களுக்குத் தெரிந்தவரையில், ஒருகாலத்திலும் இது உண்மையில்லாமல் இருந்ததில்லை. இருண்ட யுகங்களிலும், சுவிசேஷ யுகம் முழுவதிலும், சத்தியத்தைப் பிரசங்கிப்பதினால், அந்தகார லோகாதிபதியினால் சிந்தை இருளடைந்தவர்களிடமிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களுக்கு உபத்திரவங்கள் வந்திருக்கின்றன. நாம் எந்தளவுக்கு உதடுகளைத் திறந்து கர்த்தருடைய சுவிசேஷத்தைக் கூறுகிறோமோ, அந்தளவுக்கு நமக்கு சாத்தானிடமிருந்தும், அவனால் குருடாக்கப்பட்டவர்–களிடமிருந்தும் எதிர்ப்புகள் வரும். ஒருவர் உதடுகளினாலே தேவனைத் துதிக்கவும் செய்யலாம், அவ்வுதடுகளைக் கொண்டே மனிதர்களைக் காயப்படுத்தவும் செய்யலாம். தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட வகுப்பாரின் உதடுகளானது – அவருடைய ஊழியத்திற்கென்று தற்போதைய ஜீவியத்தை அர்ப்பணித்தவர்களின் உதடுகளானது – அவரைத் துதிப்பதற்காக அர்ப்பணிக்கப்படவேண்டும். நம்முடைய தேவனுடைய மகிமையான குணத்தையும் பரிவிரக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காகவும், நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிற தெய்வீகத்திட்டத்தின் அதிசயங்களை வெளிப்படுத்துவதற்காகவும் அர்ப்பணிக்கப்படவேண்டும்.

---------